ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2122/14 - 2019 මැයි මස 07 වැනි අඟහරුවාදා - 2019.05.07
*2122/14 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: YAK/LAN/01/03/16.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/15/2017/வீஈ/364.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில், தல்பே பத்துவ வடக்கு யக்கலமுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் 179 A, நாகியதெனிய கிராம அலுவலர் பிரிவில், நாகியதெனிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் நில அளவை செய்து தயாரிக்கப்பட்ட கிராமத்தின் இறுதி இல. 638 கொண்ட வரைபடத்தின் மேலதிக இல. 24 கொண்ட, பத்திர இல. 25 துண்டு இல. 858 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 4.9954 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

1. **துண்டு இல. 858**

காணியின் பெயர்: தலங்கஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டத்தில் பலவகையான பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வடவல வெவிலி சமாகம; விஸ்தீரணம் : 4.9954 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு யக்கலமுல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்திம ஸி முஹன்திரம்கே,
பிரதேச செயலாளர்,
யக்கலமுல்ல.

பிரதேச செயலகம்,
யக்கலமுல்ல,
2019, ஏப்பிறல் 29.

5 - 522

1A - G 30014 - 17 (2019/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.